**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி**

**அ.வ.எண்.29/2024**

இந்நீதிமன்ற எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பு 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2026 ஆண்டு பிப்ரவரி மாதம் 23 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : நாரயணசாமி | மதம் | : இந்து |
| த/பெ | : ரெட்டி வெங்கடசாமி ரெட்டி | ஜாதி | : -- |
| வயது | : 50 | கிராமம் | : மேதினிபுரம் |
| தொழில் | : விவசாயம், ராணுவம் ஓய்வு | வட்டம் | : திருத்தணி |

**23.02.2026**

**வா.சா. 1 திரும்ப அழைக்கப்பட்டு பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. நான் என்ன படித்துள்ளேன் என்றால் 11ம் வகுப்பு வரை படித்துள்ளேன். நான் தற்போது விவசாயம் செய்கிறேனா அல்லது வேறு வேலை எதுவும் செய்கிறேனா என்றால் விவசாயம் செய்கிறேன். என் அப்பா பெயர் என்ன என்றால் வெங்கடேச ரெட்டி ஆகும். எனது பிரமாண வாக்குமூலத்தில் ரெட்டி வெங்கடசாமி ரெட்டி என்று உள்ளது என்றால் ஆமாம். அவரை ரெட்டி வெங்கடசாமி ரெட்டி என்றுதான் அழைப்பார்கள். சித்தூர் மாவட்டத்தில் இருந்து திருவள்ளூர் மாவட்டம் பிரிந்த போது பெயரின் முன்னாள் இருந்த ரெட்டியை நீக்கிவிட்டார்கள். எனது பள்ளி சான்றிதழ், பணி சான்றிதழில் ரெட்டி வெங்கடசாமி ரெட்டி என உள்ளதா அல்லது வெங்கடேச ரெட்டி என உள்ளதா என்றால் வெங்கடேச ரெட்டி என்றுதான் உள்ளது.

2. என்னுடன் பிறந்தவர்கள் எத்தனை பேர் என்றால் 4 பேர். 1.வேலாயுதம், 2. கற்பகம், 3. தேசம்மாள், 4. நான் ஆவோம். அதில் வேலாயுதம் மட்டும் தற்போது உயிருடன் இல்லை. இறந்துவிட்டார். எனது அம்மா பெயர் என்ன என்றால் லட்சுமி ஆவார். என் அம்மா உடன் பிறந்தவர்கள் யார் யார் என்றால் எனக்கு தெரியவில்லை. என் பிரமாண வாக்குமூலம் பத்தி 4ல் என்

அப்பா இறந்த பின்பு என் தாய்மாமா துரைசாமிதான் என் அம்மா உடன் பயிர் செய்து வந்தார் என்று சொல்லியுள்ளேன் என்றால் என் அம்மா அப்படி சொல்லியிருந்தார். நான் தாய் மாமாவை பார்க்கவில்லை. என் அம்மா சொன்னதை வைத்து அவ்வாறு நான் சொல்லியுள்ளேன்.

3. என் அம்மா எந்த ஊர் என்றால் தெரியாது. லட்சுமாபுரம் என்று சொன்னார்கள். நான் போனதில்லை. இந்த வழக்கை என்ன பரிகாரம் கேட்டு தாக்கல் செய்துள்ளேன் என்றால் பூர்வீக சொத்தை எங்களுடையது என சொன்னார்கள். எனவே வழக்கு தாக்கல் செய்துள்ளேன். யார் யார் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் கந்தன், சேகர் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளேன். கந்தன், சேகர் எனக்கு என்ன உறவு என்றால் ஊர்க்காரர்கள் ஆவார்கள். நான் பொய்யாக சொல்கிறேன் என்றாலும் கந்தன், சேகர் ஆகியோர்கள் எனது தாய் மாமா பிள்ளைகள் என சொல்லியுள்ளேன் என்றால் நான் அவர்களை பார்த்ததில்லை. பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

(சாட்சி தேவையில்லாமல் வழக்கறிஞருடன் பேசியதால் குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது)